DEPOSITION OF WITNESS
(Chapter XXIII Code of Criminal Procedure)
IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, THIRUVADANAI

| | | |
|---|---|---|
| Calendar | ... | |
| Miscellaneous | ... | |
| Preliminary Register | ... | Case No: C.C No. 353/2022 |
| Session | ... | |
| | | Prosecution / PW-1 |
| Deposition of Witness for | ... | Defence / Court |

---

| | | |
|---|---|---|
| Name | : | திருமதி.பாகம்பிரியாள் |
| Father's Name (or) | | |
| Husband Name | : | க/பெ.ரத்தினம் |
| Village | : | கடம்பனேந்தல் |
| Taluk | : | |
| Caste | : | |
| Calling | : | |
| Religion | : | |
| Age | : | |

(A1 died. A3 present. A2 absent U/s.317 Cr.P.C petitoin filed heard and allowed. ).

Solemnly affirmed in accordance with provisions of Act X of 1873 the day of 06.11.2023

---

**முதல் விசாரணை**

1. நான் கடம்பனேந்தல் கிராமத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரியை தெரியும் மற்ற எதிரிகளையும் தெரியும்.

2. பல வருடங்களாக எங்கள் வீட்டிற்கு வரும் 15 அடி பாதையில் எதிரிகள் வண்டியை வைத்து மறித்து, விறகை அடுக்கி வைப்பது போன்றவற்றால் பிரச்சனை இருந்து வந்தது.

3. இந்நிலையில் 11.06.2018 ம் தேதி மாலை 05.00 மணியளவில் எனது மகன் திருமூர்த்தி பைக்கில் எங்கள் வீட்டிற்கு வந்தான் பாதையை மறைத்து எதிரிகள் இரண்டு மூன்று பைக்குகளை வைத்திருந்ததாக என்னிடம் எனது மகன் சொன்னார்.

4. நான் எனது மகனிடம்எதிரிகள் ஊருக்கு கட்டுப்படவில்லை அதனால் வேறு பாதையில் செல்லுமாறு எனது மகனிடம் சொன்னேன். நீ பத்து நாள் தான் இங்கு வருகிறாய் தேவையில்லாத பிரச்சனை வேண்டாம் என்று எனது மகனிடம் சொன்னேன்.

5. அப்போது எதிரி ஈஸ்வரன் எங்கள் வீட்டின் முன்பு வந்து கம்மாக்கரையில் நின்று கொண்டு கண்டார ஓழி, தேவிடியா, அவுசாரி வாடி வெளியே என்று அசிங்கமாக திட்டிக் கொண்டிருந்தார்.

6. அப்போது நானும் எனது மகனும் வீட்டில் இருந்தோம். எனது கணவர் வெளியே சென்று ஏற்கனவே பேசியாகிவிட்டது ஏன் அசிங்கமாக பேசுகிறாய் என கேட்டதற்கு இறந்துபோன எதிரி கனகராஜ் மற்றும் எதிரி ஈஸ்வரன் ஆகியோர்கள் இங்கே எங்கடா உனக்கு பாதை உன்னை கொல்லாமல் விடமோட்டோம் என்று சொல்லி எனது கணவரை தள்ளிவிட்டதில் எனது கணவர் கம்மாக்கரையில் விழுந்துவிட்டார்.

7. பின்னர் நானும் எனது மகனும் சென்று எனது கணவரை தூக்கியபோது ஈஸ்வரன் அங்கிருந்த இரும்பு கம்பியை தூக்கி வாடி

தேவிடியா முண்ட என்று திட்டி இடதுபக்க இடுப்பில் அடித்துவிட்டார் நான் துடித்து கீழே விழுந்துவிட்டேன்.

8. எதிரி கனகராஜ் கட்டையை வைத்து எனது முதுகில் அடித்தார். எதிரி ஈஸ்வரன் காலால் எனது குரல்வளையை ஏறிமிதித்தார். எனது மகன் என்னை தூக்கி எதிரிகளை கேட்ட எனது மகனை எதிரி சகுந்தலா இவளை உடைத்த மாதிரி அவனையும் உடையுங்கள் என்று சொன்னார்

9. எதிரிகள் மூவரும் எனது மகனை கம்பால் அடித்தார்கள் அவனுக்கு ஊமைக்காயம் ஏற்பட்டது. உடனே பக்கத்தில் இருந்த செல்லம், மாரிமுதது ஆகியோர்கள் எங்களை தூக்கி ஆட்டோவில் வைத்து தொண்டி காவல் நிலையம் சென்றோம்.

10. அங்கு போலிசார் நான் சீரியஸாக இருப்பதாக சொல்லி எங்களை மருத்தவமனைக்கு போகச்சொன்னார்கள். பின்னர் அங்கிருந்து தி'ருவாடானை மருத்துவமனைக்கு வந்தோம். அவர்கள் இராமநாதபுரம் மருத்துவமனைக்கு சென்று பாருங்கள் என்று சொல்லி ஆம்புலன்சில் எங்களை ஏற்றி அனுப்பி வைத்தார்கள்.

11. பின்னர் மேற்படி இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் உள்நோயாளியாக 15 நாட்கள் சிகிச்சையில் இருந்தோம். இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்து போலிசார் என்னை விசாரணை செய்தார்கள். என்னிடம் காட்டப்படும் புகார்மனுவில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். அதில் உள்ள விவரங்கள் நான் சொல்ல போலிசார் எழுதி எனக்கு படித்து காண்பித்தார்கள். **(அந்த புகார்மனு அ.சா,ஆ.1 ஆக குறியீடு செய்யப்படுகிறது)**. அதன்பிறகு என்னை மதுரை இராஜாஜி அரசு மருத்துவமனையில் ஒரு மாதம் சிகிச்சையில் வைத்திருந்தார்கள். வழக்கு

சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்,

**<u>எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை</u>**

1. எனக்கு சொந்த ஊர் கடம்பனேந்தல் ஆகும். அந்த ஊரில் தான் நான் பிறந்து வளர்ந்தேன். அந்த ஊரில் எங்கு பாதைகள் உள்ளது என்று எனக்கு தெரியும். நானும் எதிரிகளும் ஒரே சமூகத்தை சேர்ந்தவர்கள் மற்றும் உறவினர்கள் என்றால் சரிதான்.

2. எதிரிகளின் வீடு வடக்கு பார்த்த வாசல் வீடு என்றால் சரிதான். எனது வீடு தெற்கு பார்த்த வாசபடி வீடு என்றால் சரிதான். எதிரிகளின் வீட்டின் முன்பு கிழமேல் பாதை உள்ளது என்றால் சரிதான். அதில் ரோடு எதுவும் போடப்படவில்லை.

3. எதிரி கனகராஜ் இந்த சம்பவத்திற்கு முன்பாக எங்கள் மீது தொண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளார் என்றால் இல்லை நாங்கள் தான் அவர்கள் மீது புகார் அளித்திருந்தோம். எதிரிகள் தான் இந்த சம்பவம் நடந்ததாக சொல்வதற்கு முன்பு எங்கள் மீது தொண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்தார்கள் என்றும் வழக்கிற்காக புகார் அளிக்கவில்லை என்பதாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல

4. 3 வது எதிரி என் மீதும் எனது கணவர் மற்றும் சுந்தரி ஆகியோர்கள் மீது தொண்டி காவல் நிலையத்தில் புகார் அளித்து முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரிதான்.

5. எதிரிகள் மெயின்ரோட்டில் இருந்து அவர்கள் வீட்டிற்கு செல்வதற்கு எங்கள் வீட்டு வழியாக செல்ல வேண்டிய அவசியம் இல்லை. எங்கள் வீட்டின் முன்பாக கிழமேலாக பாதை உள்ளது என்றால் உள்ளது ஆனால் வேறு ஒருவர் வீட்டின் பாதை.

6. சாட்சிப்பட்டியலில் உள்ள ரத்தினம், திருமூர்த்தி, செல்லம், மாரிமுத்து, அழகு ஆகியோர்கள் எனது உறவினார்கள் என்றால் சரிதான். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் தேதி 11.06.2018ம் தேதி ஆகும். எங்கள் ஊரில இருந்து திருவாடானை அரசு மருத்துவமனைக்கு ஆட்டோவில் வர சுமார் அரை மணி நேரம் ஆகும்.

7. சம்பவம் நடந்த பிறகு மாலை 05.15 மணியளிவல் சம்பவ இடத்தில் இருந்து ஆட்டோவில் தொண்டி காவல் நிலையம் சென்றோம். அதன்பிறகு மாலை 06.00 மணியளவில் திருவாடானை அரசு மருத்துவமனைக்கு வந்தோம்.

8. பல வருடங்களாக எங்கள் வீட்டிற்கு வரும் 15 அடி பாதையில் எதிரிகளை வண்டியை வைத்து, விறகுகள் அடுக்கி வைத்துள்ளார்கள் என்று புகாரிலோ அல்லது காவல்துறை விசாரைணயிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேள்.

9. 11.06.2018ம் தேதி மாலை 05.00 மணியளவில் எனது மகன் திருமூர்த்தி பைக்கில் வீட்டிற்கு வரும்போது பாதையை மறைத்து எதிரிகள் இரண்டு மூன்று பைக்குகளை வைத்திருந்தார்கள் என்று புகாரிலோ அல்லது காவல்துறை விசாரைணயிலோ சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேள்.

10. நான் எனது மகனிடம் எதிரிகள் ஊருக்கு கட்டுப்படவில்லை அதனால் வேறுபாதையில் செல்லுமாறு எனது மகனிடம் சொல்லியுள்ளேன் என்றாலும் நீ பத்து நாள் தான் ஊருக்கு வருகிறாய் தேவையில்லாத பிரச்சனை வேண்டாம் என்று புகாரிலோ அல்லது காவல்துறை விசாரைணயிலோ சொல்லவில்லை என்றால் சரிதான்.

11. போலிசார் எந்த தேதியில் இராமநாதபுரம் அரசு மருத்துவமனைக்கு வந்து என்னிடம் புகாரை பெற்றார்கள் என்றால் தேதி தெரியவில்லை. சம்பவத்திற்கு

பிறகு இரண்டாவது நாளோ, மூன்றாவது நாளோ வந்து என்னை போலிசார் விசாரித்தார்கள். போலிசாரிடம் நான் சம்பவத்தை பற்றி சொல்லி அதை போலிசார் எழுதினார்கள்.

12. புகாரில் கையொப்பத்தின் கீழே தேதி குறிப்பிடப்படவில்லை என்றால் அதுபற்றி தெரியவில்லை. நான் புகார் அளிக்கும்போது என்னுடன் எனது கணவர் இருந்தார். எனது கணவரிடம் அறிவேன் சாட்சியாக போலிசார் கையெழுத்து வாங்கவில்லை.

13. மேற்படி ஆட்டோ ஓட்டுநரின் பெயர் ஜெகன் ஆகும். திருவாடானை அரசு மருத்தவமனையில் என்னை வெளிநோயாளியாக பாவித்து சிசிச்சை அளித்தார்கள் என்றால் மருத்துவர் சிகிச்சை ஏதும் அளிக்கவில்லை.

14. எனக்கு வெளிப்புற காயம் ஏதும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. திருவாடானை அரசு மருத்தவமனை மருத்துவர் இராமநாதபுரம் அரசு மருத்துவமைனக்கு பரிந்துரை செய்யவில்லை என்றால் திருவாடானை அரசு மருத்துவமனை மருத்துவர் தான் என்னை இராமநாதபுரம் மருத்துவமனைக்கு போகச்சொன்னார்.

15. சம்பவத்திற்கு முன்பாக எங்கள் ஊரில் உள்ள தனகோபால் என்பவருக்கும் எனக்கும் பிரச்சனை உள்ளது என்றால் சரிதான். ராசு செல்லம்மாள் என்பவருக்கும் எனக்கும் பிரச்சனை உள்ளது என்றால் எதிரிகள் சொல்லி தான் தன்னிடம் சண்டைக்கு வருவார்கள்.

16. இதுபோல மலைராஜ் என்பவருடன் எங்களுக்கு பிரச்சனை ஏற்பட்டு முதல் தகவல் அறிக்கை பதிவு செய்யப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. ரத்தினம் என்பவருடன் பிரச்சனை என்றால் சரிதான்.

17. எதிரி ஈஸ்வரன் எங்கள் வீட்டின் முன்பாக கண்மாய் கரையில் நின்றுகொண்டு கண்டார ஓழி, தேவிடியா, அவுசாரி வாடி வெளியே என்ற குறிப்பிட்ட கெட்ட வார்த்தைகளால் திட்டியதாக புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

18. எனது கணவரை ஈஸ்வரன் இங்கே எங்கடா உனக்கு பாதை உன்னை கொல்லாமல் விடமோட்டோம் என்று புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல.

19. 2வது எதிரி ஈஸ்வரன் என்னை அடிக்க பயன்படுத்தியதாக சொல்லப்படும் கம்பி மற்றும் கட்டையை போலிசார்கள் கைப்பற்றினார்களா என்றால் இல்லை.

20. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் நேரத்தில் எதிரிகள் மூவரும் எனது மகனை கம்பால் அடித்தார்கள் என்று புகாரிலோ போலிசார் விசாரணையிலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல. இராமநாதபுரம் அரசு மருத்துவமனையில் விசாரித்த பிறகு வழக்கறிஞருடன் மதுரைக்கும் வந்து போலிசார் என்னை விசாரித்தார்கள்.

21. நான் நீதிமன்றத்திற்கு பேருந்தில் வந்தேன். சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் சமயத்தில் எனது கணவரிடம் சைக்கிள் இருந்தது. நானும் எனது கணவரும் சைக்கிளில் சென்று விழுந்து காயத்தை ஏற்படுத்திக்கொண்டு 1வது எதிரி கனகராஜ் என் மீது கொடுத்த புகாரை மனதில் வைத்துக்கொண்டு எதிரிகளை பழிவாங்கும் நோக்கோடு இந்த புகார் அளிக்கப்பட்டுள்ளது என்றால் சரியல்ல.

22. சம்பவம் நடந்ததாக சொல்லப்படும் இடத்திற்கு மேற்கே கண்மாய்

உள்ளது. எனது வீட்டிற்கும் மேற்கே அழகு வீடு உள்ளது. எனது வீட்டிற்கும் வடக்கே ராமு வீடு உள்ளது. கிழக்கிலும் வேறு ஒரு ராமு வீடு உள்ளது.

23. நான் சொன்ன நேரத்தில், சொன்ன தேதியில், சொன்ன விதத்தில் எந்த சம்பவமும் நடைபெறவில்லை என்றாலும், நான் சொன்னதுபோல 2வது எதிரி ஈஸ்வரன் கம்பியை வைத்து இடதுபக்க இடுப்பில் அடிக்கவில்லை என்றாலும், எதிரிகள் எனது மகனை கம்பால் அடிக்கவில்லை என்றாலும், 3வது எதிரி எனது மகனை அசிங்கமாக பேசவும் இல்லை, அடிக்கவும் இல்லை என்றால் சரியல்ல.

24. 2வது எதிரி ஈஸ்வரன் சம்பவம் நடந்ததாக சொல்லும்பொழுது எனது குரல்வளையை மிதித்தாக புகாரிலோ, போலிசார் விசரணையலோ சொல்லவில்லை என்றால் சரியல்ல

25. நான் ஊரில் உள்ள அனைவரிடமும் பிரச்சனை செய்து பஞ்சாயத்து செய்யும்போது அவர்கள் உங்கள் பேச்சை கேட்கவில்லை என்றால் அவர்களுக்கு எதிராக ஒரு பொய் வழக்கை தாக்கல் செய்து உங்களது பழக்கம் என்றால் தவறு.

26. அதேபோல் இந்த எதிரிகள் மீது இந்த பொய் வழக்கை தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரியல்ல. என்னை போலிசார் விசாரணை செய்யவில்லை என்றால் சரியல்ல. எதிரிகளுக்கும் இந்த வழக்கிற்கும் சம்பந்தம் இல்லை என்றால் சரியல்ல.